Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிவரு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுவரு கார்த்திகைமீ உஎஉ வெள்ளிக்கிழமை (13 December. 1963) [இல-நடஎ

## "கல்லில்லாத அரிசியும் பிழையில்லாத நூலும் இன்று இல்லை"

### நாவலர் குருபூசை விழாவில் சுத்தானந்த பாரதியார் குறை

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

–சிதம்பரம் கார்த்திகை 22

சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியா சாலையையும், சென்னையில் வித்தியாநுபாலனயந்திரசாலையையும் ஸ்தாபிதம் செய்த யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமானின் 84ம் ஆண்டு குருபூசைவிழா (சென்ற 7-12-63 ல்) சிறப்பான முறையில் நடைபெற்றது. காலை 6 மணிக்கு வித்தியாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஸ்ரீ சேக்கிழார் கோயிலில் கூடி விநாயகர் வழிபாடு செய்தனர்.

காலை 7மணிக்கு சேக்கிழார் கோயிலிலிருந்து ஆசிரியர்கள், மாணவர்கள் சிறிய விமானத்தில் ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமானின் திருவுருவப்படத்தை அலங்கரித்து வைத்து நாதசுர வாத்திய கோஷத்துடன் ஊர் வலமாகப்புறப்பட்டு வித்தியாசாலைக்கு வந்துசேர்ந்தார்கள்.

காலை 8-30 மணிக்கு வித்தியாசாலையின் நடுமண்டபத்திலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் திருவுருவப் படத்தினை நன்கு அலங்கரித்து மாணவர்கள்மாணவிகள் ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கானோர் ஆராதனைகள்செய்து நாவலர் பெருமானுக்கு அஞ்சலி செய்தனர்

மாலை 4 மணிக்கு பாராட்டு விழா கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தலைமையில் தொடக்கமாகியது

விழாத்தொடக்கத்தில் குரு வணக்கமாக நாவலர் பெருமானின் கீர்த்தனை பாடப்பெற்றது. விழாவைப் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டாக்டர் சி.பி. ராமசாமி ஐய்யர், 'கலைமகள்" ஆசிரியர் ஸ்ரீ கிவா. ஜகந்நாதன் மற்றும் பலர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்

விழாவின் தலைவர் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தலைமையுரை கூறுகையில் நான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் பாலபாடமும் சை[illegible]விடையும் நினைவுக்கு வருகின்றது. சுமார் 300 ஆண்டுகள் பிறமொழிகளின் மயக்கத்தால் நாம் தமிழர்களாக வாழ முடியாதிருந்த சமயத்தில் நாவலர் பெருமான் தோன்றி நமக்கு சமய நூல்களை இயற்றிக் கொடுத்துள்ளார். இவர் இயற்றிய நூல்கள் வேதத்தின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

தற்சமயம் கல்லில்லாத அரிசியும், பிழையில்லாத புத்தகமும் கிடையாது. ஆனால் நமது நாவலர் பெருமான் இயற்றிய நூல்களில் ஒரு பிழையைக்கூட காணவே முடியாது. ஆகவே ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் அதிமேதையாவார், அவர் செய்த காரியத்தை நாட்டில் வேறு யாருமே செய்ய முடியாது நாவலர் பெருமான் திருவாசகத்தை மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரை வெளியிட்டவராவார் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சாஸ்திரப்படி நடந்தவர். ஒருநாள் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சிவபூஜை செய்யும்போது ரோஜாமலர் இருப்பதைக் கண்டு பூஜைக்கு ரோஜாமலர் அர்ச்சனை செய்யலாம் என்று சாஸ்திரத்தில் கூறப்படவில்லையே என்று ரோஜா மலரை எடுத்து அர்ச்சனை செய்யாமல் விட்டுவிட்டார். அன்னார் பணிகள் நாட்டில் வளர்ச்சி அடைவதற்கு செல்வந்தர்கள் நிறைய செல்வங்களை அள்ளி அள்ளி வழங்கல் வேண்டும்.

கவியோகி சுத்தானந்தபாரதியார் தொடர்ந்து பேசுகையில் நான் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானைப்பற்றி ஓர் நாடகம் எழுதியிருக்கின்றேன். அடுத்த ஆண்டு குருபூசை அன்று இந்த வித்தியாசாலையில் நாடகத்தை அரங்கேற்றஞ் செய்வ[illegible]றகு வித்தியா சாலை நி[illegible]கம் அனுமதி கொடுத்த[illegible]அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

சென்னை சைவ சித்தாந்த மகாசமாசத்தின் தலைவரான வித்துவான் ஸ்ரீ ஜி. [illegible] துசாமிப்பிள்ளை பாரா[illegible] வழங்கினர். ——

## நற் சிந்தனை

அஞ்சு மடக்கு
மறிஞரே யிவ்வுலகிற்
சஞ்சலத்தை
வென்றுயர்வார் தாம்.

## உலகத் தமிழ் மன்றம்

உலகெங்கிலுமிருக்கும் தமிழுணர்வு தழைத்த நெஞ்சம் படைத்த சான்றோர்கள் அனைவரும் விரும்பி எதிர்பார்த்திருந்த ஒரு நிகழ்ச்சி—அவர்கள் கண்டுவந்தகனவு—இந்த ஆங்கில மார்கழி 1-ம் திகதி நனவாக்கப் பட்டுள்ளது. அதாவது 'உலகத் தமிழ்மன்றம்' மலாயா நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

விபரங்களும் மன்றத்தின் நோக்கங்கள் சட்ட திட்டங்களும் மறு இதழில் வெளியாகும்.

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சபை ஆசிரம நாவலர் மண்டபத்தில் ஆங்கில மார்கழி 23, 24, 25-ம் நாட்களில் நடாத்தப் பெறும இவ்விழாவில் தமிழகத்திலிருந்து திருவெண்காடு சிவராஜயோகமடம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானசுவாமிகளும், கோயம்புத்தூர் புலவா திருமதி, சி. குழந்தையம்பாள் M L A. அவர்களும், இலங்கையிலுள்ள அறிஞர்களான வித்துவான் க. கி. நடராஜன் B. O. L, திரு. ஞா சபாபதிதேசிகர், மு. வைத்தியலிங்கம், செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான், பண்டிதர், இ. திருநாவுக்கரசு, வே. சோமசுந்தரம், வே. நாகலிங்கம், வித்துவான், க. வேந்தனார் ஆகியோர் உட்படப் பலர் பங்குபற்றி விழாவைச் சிறப்பிப்பார்கள். ——

யாழ். சைவபரிபாலன சபை நடாத்தவிருக்கும் சைவப் புலவர் பரீட்சைப் பாட விதானங்களும் பரீட்சை விதிகளும் அடுத்த இந்துசாதனம் இதழில் தொடர்ந்து [illegible]

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் சேங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத தொண்டனுர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

## சிவாலயங்கள் திருந்தின! எழுந்தன

['இந்துசாதனம்' நடாத்திய நாவலர்கட்டுரைப்போட்டியில் மாணவர் பகுதியில் 3-வது இடத்தைப்பெற்ற கட்டுரை]

(ஆ குணசிங்கம், யாழ். மத்தியகல்லூரி)

(முற்றொடர்—2)

**நல்லூர் முருகன் கோயிலில்**

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் இரகுநாதமாப்பாணர் இவரை அடைந்து தெய்வயானையம்மை திருமணப்படலத்துக்குப் பொருள் சொல்லல் வேண்டும் எனக் கேட்டபோது அதற்கு நாவலர் "சிவாகம விதி ஒன்றுமில்லாத கோயிலுக்கு நான்வரேன்"என்று சொல்லி மறுத்துவிட்டார் மேலும் பலமுறை இரந்து 'கோயிலைத் தங்கள் எண்ணப்பிரகாரம் நடத்துவதற்கு எனக்குச் சம்மதம்' என்று சொல்லி அழைத்துச் சென்றனர். கோவிலில் தூபி இல்லாமை குற்றமென்றும், கோயிலை விதிப்படி கட்டல்வேண்டும் என்றும், கந்தசுவாமி கோவிலானால் மூலமூர்த்தி சிலையாலமைக்கப்பட்ட சுப்பிரமணிய மூர்த்தியாய் இருத்தல் வேண்டுமென்றும் அக்கோயிலிற் காணப்பட்ட குறைகளை எடுத்துப் பேசினார்.

**ஏனைச் சிவாலயங்கள்**

இப்படியாக வேறு பல ஆலயங்களின் தோற்றத்துக்கு ஆளாகவிருந்தார். அரசினர் வசம சிக்கியிருந்த திருக்கேதீஸ்வரத்தின் நிலத்தை மீட்டுக் கொடுத்தார், யாழ்ப்பாணத்திற் கீரிமலையிலே இருந்த சிவாலயம் அழிந்துவிட்டமையால் "கீரிமலைச் சிவன்கோயில்" என்னும் பெயர்கொடுத்து அழிந்த இடத்திலேயே வேறொரு கோயில்கட்ட முயற்சி செய்யும்படி பிராமணக் குருக்கள்மாரைத் தூண்டிவிட்டார்.

**கிறீத்தவ யாழ்ப்பாணம்**

பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திலே உண்டான தமிழ்ச்சங்கம், கிறீஸ்துமதக் கண்டனச் சபை, சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கோப்பாய் நாவலர் பாடசாலை, புத்தூர் சைவப் பிரகாச வித்தியாசாலை, என்பவைகளுக் கெல்லாம் வித்திட்டவரும் இவரே.

பரசமய கோளரியாகிய இவர் அவதாரஞ் செய்திலராயின் யாழ்ப்பாணம் முழுவதும் இப்போது கிறிஸ்தவ நாடாய் இருக்கும். அதுமட்டுமல்லாமல் சைவக் கோவில்கள்எல்லாம் கிறிஸ்தவ ஆலயங்களாகவே (Churches) இருக்கும். சைவ சமயத்தை விருத்தி செய்யவேண்டுமென அவாவுற்ற நாவலர் தமது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் உள்ள வசந்த மண்டபத்திலே ஆரம்பித்தார் இவரது கடைசிப்பிரசங்கம்நிகழ்ந்தது வண்ணார் பண்ணையில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினத்தன்றாகும். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் ஆகிய நால்வரும் எவ்வாறு சமயப்பணியில்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## பொங்கல் தினத்தில் கலைவிழா

யாழ்ப்பாணம் மாநகர மண்டபத்தில் 14—1—64 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் (தைப்பொங்கலன்று) யாழ், நுண்கலைக் கழக ஆதரவில் மாபெரும் கலைவிழா ஒன்று நடைபெறும. அத்தருணம் மங்கள இசை, குழலிசை, இன்னிசை, தாளவாத்திய இசை முதலியன நிகழ்ச்சிகளாக இடம்பெறும் எனவும், விழா மணடபத்தில் 'கலைமலர்' இலவசமாக வழங்கப்படும் என்றும் அறியப்படுகிறது. ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஸ்ரீ கார்த்திகை மீ உஎ௳ வெள்ளிக்கிழமை

## சிதம்பரத்தில் சற்குருமணிக்குச் சிறப்பான நினைவு

நாவலர் புகழ் நனிபொலிந்த தென்னிந்தியாவில் அன்னார் பெருந்தொண்டாற்றிய தில்லைச் சிதம்பரத்தில் என்றும் அந்நாமம் திகழ்ந்தவண்ணமாயிருக்கின்றதை ஈழத்து மக்கள் கண்டும் கேட்டும் களிபேருவகை யெய்துகின்றனர். ஆறுமுகநாவலர் அறநிலையத்தைக் காக்கும் பெரும்பொறுப்பைப் பெற்று நற்றொண்டாற்றி வரும் திரு. தி. க. இராசேசுவரன் இக்குருபூசையைச் சிறந்த முறையிலே சிதம்பரத்திற் செய்துவருகின்றனர். இந்தியத் தமிழகத்தின் செந்தமிழ்ச் செல்வர்கள் சைவ சித்தாந்த கலாநிதிகள் புலவர்கள் அறிஞர்கள் இவ்விழாவிற் பங்குபற்றி மகிழ்ச்சியுடன் நாவலர் பெருமானின் பேருபகாரச் சைவத் தொண்டின் சீரையும் சிறப்பையும் விளக்கிச் சைவ உலகத்தில் நாவலர் நன்னெறி உணர்ச்சியைக் கொணரப் பெரிதும் உழைத்து வருவது மகிழ்ச்சிக்குரியது; போற்றற்பாலது.

இவ்வாறு நாவலர் நினைவை மக்களுக்கு ஊட்டும் பணி ஆற்றுவன அன்னார் அருஞ்சேவையைப் பின்பற்றி நிலவும் சபைகளே. வள்ளுவர் நாமம் மாநிலமெங்கும் ஓங்குவதுபோல நாவலர் நற்பெயரும் தாரணியில் விளங்கவேண்டியதியல்பே. சைவமும் தமிழும் வளர்த்த இப்பெரியார் அவ்வழி மக்கட் பண்பை நிலைநாட்டினர். எனவே மக்களின் மகத்தான தலைவனுகக் கருதப்படுகின்றனர்.

ஈழத் தமிழகத்து மக்கள் சபைகள் சார்பாகச் சற்குருமணியின் குருபூசையும் நிகழ்வதுடன் பொதுவாகக் கொழும்புமா நகரிலும் யாழ்ப்பாண மாநகரிலும் நாவலர் இலட்சிய விழாக்களை நடத்துவது பொருத்தமாகும். அரசியலிற் சமுகவியலிற் சமயவியலில் அனைத்திலும் சீரான சேவைசெய்த செம்மையாளர் நாவலர் என்ற உண்மையை மக்கள் உணருவார்களேயானல் அவர்காட்டிய நல்வழியில் நின்று நாட்டுக்கு நற்றொண்டாற்ற முனைவருவர் என்பது திண்ணம்.

—0—

# நெஞ்சில் உரன் மிக்கவர் நேர்மைத்திறங் கொண்டவர் நாவலர்

[ பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் ]

முற்றொடர்—2.

### நூல்களின் இன்பக்காட்சி

சைவசமயமும், தமிழ்மொழியும், நாவலர் கண்கள்போலக் கருதியவர். கந்தபுராணம், பெரியபுராணம், சேதுபுராணம், திருவிளையாடற்புராணம் என்பன நாவலரின் இலக்கிய ஆராய்ச்சித் திறமையைக் காட்டும். செந்தமிழ் செவ்விய வசனநடை நாவலருக்கே அமைந்தது. தமிழில் குறியீடுகள் தக்க இடங்களில் இட்டு பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண சூசனம் என்பன எல்லாருந் தமிழ்கற்று இன்புற்றிருக்க வேண்டற்பாலன என்று கருதி இறைவனருளை முன்னி அப்பணிகளை இனிது செய்தவர் நமது நாவல சிரோமணியவர்களே. நாவலரின் நூல்களை யாவரும் மதித்துப் போற்றினர். பிரசங்கமாரி பொழி கொண்டலாக எண்டிசையும் நாவலர் புகழ் பரவியது. அஞ்சாது உண்மை கூறும் வீரம நாவலரிடம் விளங்கிற்று. இராமலிங்க சுவாமிகள்பாடல்கள் மருட்பா என்றதனுல் பல இடையூறுகள் தோன்றின. யாவும் பரிதிமுன் பனியெனப் பறந்துபோயின. திருக்குறள், சைவசமய நெறியுரை முதலியன, இராமநாதபுரம ஜமீந்தார், பொனுச்சாமி தேவரவர்கள் வேண்டுகோளின்படி வெளிவந்தன. சைவ சித்தாந்த சாத்திரங்களில் நாவலருக்கு மிக்க ஆராய்ச்சியிருந்தது. அதனுல் நாவலரவர்கள் பிரசங்கம் ஆஸ்திக மக்களுக்குத் தேவாமிர்தம்போலச் செவிவழியே சென்று உள்ளங் குளிரச் செய்தது. பிரசங்கம் செய்யும் அரிய சமயத் தொண்டை விடலாகாது என்று நாவலர் நினைத்தார் நகரத்துச் சிவாலயம் அதற்கிடங்கொடுத்தது இன்று நாவலரின் பிரசங்கம என்ருல் பலநூற்றுக்கணக்கான மக்கள் வந்து குழுமிக் கேட்பாராயினர். கந்தபுராணம திருவிளையாடற் புராணம் முதலியன ஆங்காங்கே படித்துப் பொருள் கூறப்பட்டது. காசிவாசி செந்திநாதையர் நாவலருக்குச் சுகக்குறைவானகாலங்களிலே அவர் செய்த நற்பணியைச் செய்து வந்தார். சமய வுண்மைகளைப் பரசமயகண்டனத்துடன் நாவலர் எழுதி வெளியிட்டார் ‘சைவ தூஷண பரிகாரம்’’ ‘சிவனுந் தேவனு என்ற தியநாவுக்கு ஆப்பு’’ என்பன அக்காலம வெளிவந்தன.

### நாவலர் சேவையால் கண்ட பயன்

யாழ்ப்பாணத்தில் சைவசமயம் வளர வேண்டும், தமிழ் தழைக்க வேண்டும் என்ற முழுமனக் குறிக்கோளை நாவலர் பெருமான் கைக்கொண்டு [illegible]தார். அக்காலத் [illegible]கள் யாவும் இவ்விரண்டினுள் அடங்கியிருந்தன. அவ்வுத்தம நினைவு இப்போது உருவானதில் சைவப்பிரகாச வித்தியாசாலை நன்கு நடைபெறுகின்றது. கோப்பாயில் ஒரு கல்வி நிலையம் நடைபெறவில்லை. சிதம்பர வித்தியாசாலை பல இன்னல்களுள் கடைத்தேறி நன்கு நடைபெறுகின்றது. நாவலர் காலத்தில் மதம்மாறிய பலர் சைவர்களாயினர் பிராமணர் பலர் தீக்ஷை பெற்றுக்குருக்களாகிச் சிவநெறியொழுகினர். திருக்கேதீச்சரம், நகுலேசுரர் கோயில் முதலியவை நாவலர் நினைவின்படி சிறப்படைந்தன. ஆகவே தேவையின் சேவை நாவலரால் நன்கு புரியப்பட்டது அறிக. இன்னும் தமிழ்ப் பல்கலைக் கழகம், சைவசித்தாந்தவகுப்பு முதலியன பிரமுகர்கள் கவனத்திலிருக்கின்றன.

### நாவலர் வாக்கு வன்மை

சுன்னுகம்
அ. குமாரசுவாமிப் புலவர்
அவர்கள் கூறியது

வினவுத்தர வெண்பா

ஐந்தின்பி னுவதென்ன
வானனததின் பேரென்ன
முந்து நடுவன் மொழியென்ன
— இந்திரர்க்கு
மாறுகொண்டோன் பேரென்ன
வாக்கின் மிகவல்ல
ஆறுமுக நாவலனே யாம்.

(ஐந்தாம் குரவர் என்பது இதனுல் புலப்படும்.

ஆரூரனில்லைப் புகலியர்கோ
னில்லை யப்பனில்லை
சீரூருமாணிக்க வாசகனில்லை
திசையளந்த
பேரூருமாறுமுக நாவல
னில்லைப் பின்னிங்கியார்
சீரூரும் வேணியன் நாமத்தைப்
போதிக்கு நீர்மையரே.

ஆறுமுகநாவல ரவர்கள் புகழும்பணியும் பல்லாண்டு நிலைத்து நிலவுவதாக.

சுபம்.

## நாவலர் நினைவில் போட்டிகள்

இருபாலை சைவபரிபாலன சங்கம் நடாத்திய நாவலர் தினப் பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் சென்ற 7-12-63 சனிக்கிழமை காலை 9 மணி — நண்பகல் 12 மணிவரை கந்தவேள் சைவவித்தியாசாலையில் (இருபாலை) ஆசிரியர் திரு. க மார்க்கண்டு பிரதம மேற்பார்வையின் கீழ் - மத்திய - மேற்பிரிவுகளில் நடைபெற்றன.

இவ்வாரம் 15-12-63 — 21-12-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

ஞாயிறு திங்கள் காலை எச்சரிக்கையாகக் கழிய வேண்டும் மிகுதி வாரம் புது முயற்சிக்கேற்றது. பண நன்மையும், பெருஞ் செலவும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

பண நன்மை, நிம்மதியீனம், சுகவீனம் உண்டாம். திங்கள் செவ்வாய் புதன் வச்சரிக்கையாக இருக்கவும். மிகுதி நாட்கள் சார்பானவை.

**மிதுனராசி** மிருகசிரிடம். 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம். ப் பாதம்.

முற்பாதி வாரத்தில் பணலைபம், பின்பு தொழில் வெற்றி, சுகவீனம் உண்டாம் புதன் மாலை வியாழன் வெள்ளி எச்சரிக்கை

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

எதிர்ப்பு மறையும். புது முயற்சி வெற்றியும், நிலபுல இலாபமும் உண்டாம். சனிக்கிழமை வச்சரிக்கை.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நிம்மதியீனம், எண்ணியதற்குத் தடை, சுகவீனம், எதிரிகளுக்கு இடையூறு, பழைய முதலீடுகளில் இலாபம் உண்டாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1 2 பாதம்.

இனத்தவருடன் மோதல், தொழில் நன்மை, பிறர் உதவி, பண இலாபம், நிம்மதியீனம் உண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

இளைய சகோதரர் உதவி, நிலபுல இலாபம், இனத்தவருடன மோதல், தந்தையாருக்குச் சுகவீனம் உண்டாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4. பாதம் அநுஷம், கேட்டை.

இனத்தவர், நண்பர்களுடன் சச்சரவு, புது முயற்சிகள தாமதித்து வெற்றி பெறுதல், விவசாய இலாபம் என்பன உண்டாம.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நிம்மதியீனம், சுகவீனம், உமது அலுவலில் கண்டனங்கள். எதிர்ப்புகள் உண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4 பாதம் திருவோணம் அவிட்டம 1, 2ம் பாதம்.

அதிக செலவு, கடன்படல், உறவினர் தொல்லைகள், எதிரிகளுக்கு இடையூறு உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணநன்மை, பழைய் முதவீடுகளால் வரும்படி, வயிற்றுக்கோளாறு, நிம்மதியீனம் உண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

தொழில் நன்மையும், நிலபுல இலாபமும், எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் மூலமான தொல்லையும், இனத்தவருடன் தொல்லையும் உண்டாம்.

## தவத்திரு நாவலர் பெருமான் 84-ம் குருபூசைத் திருவிழாவில் விழாப் பொறுப்பாளர் கூறிய வரவேற்புரையில் ஒருபகுதி

தமிழ் மொழியும் சைவ சமயமும் தழைத்தோங்கத் தொண்டாற்றிய தன்னிகரில் தலைவர் எனப் போற்றப்பட்டவரும் பேச்சிற்கும் உரைநடைக்கும் தந்தை எனப் பாராட்டப்பட்டவரும் பிழையற நூல்களை எழுதியும் அச்சிட்டும் தந்த பேரறிஞர் எனப் புகழப்பட்டவருமான ஆறுமுக நாவலர் பெருமானின் அறநிலையத்தைக் காக்கும் நற்பொறுப்பை நான் மேற்கொண்டு நிர்வாகம் செய்து வருங்கால், அருட்பாடுபட்டு இந்த அற நிலையத்தைத் தோற்றுவித்துக் கற்றவரும் கல்லாதவருமான எல்லாருப்பயனடையச் செய்த பெருந்தகையாரின் 84-ஆம குருபூசை இன்று சிதம்பரத்தில்கொண்டாடுகிறோம். நாவலர் பெருமான் இயற்றிய கீர்த்தனைப் போட்டி நேற்றுச் சிறப்பாகநடந்து. இன்று காலை குருபூசை நன்முறையில் நிறைவேறி இப்பொழுது நடைபெறும் இந்தப் பாராட்டுக் கூட்டத்திற்கு எல்லோரையும் வருக! வருக!! என்று மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன். தெய்வத் திருவருளால்தோன்றி ஞான ஒளியைக் கொடுத்து அஞ்ஞான இருளைக் கெடுத்து நம்மை ஆட்கொண்ட நாவலர் பெருமானை நம் ஞானசாரியராகக் கொண்டு போற்றும் இக்கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் என் உளங்கனிந்த நன்றி.

x x x

### நாயன்மார்கட்டில்

‘நாவலர் அவர்களுடைய சேவையினைத் தொடர்ந்து செய்யும் இக் கழகம் நாவலர் அவர்களுடைய தருமத்தில் எழுந்த இக் கோவிலில் நாவலர் குருபூசை செய்வது மிகவும்பொருத்தமாகும்’ என திரு. சு. பரநிருபசிங்கம் அவர்களின் தலைமையில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் நாயன்மார் கட்டு பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ. இராச இராசேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 7-12-63 ல் நடத்தப்பெற்றநாவலர் குருபூசையில், அவர் குறிப்பிட்டார். திரு. மு. கணபதிப்பிள்ளை, திரு. சி. கனகநாயகம், திரு ச சதாசிவம் ஆகியோர் பேசினர்.

### நடராஜர் விக்கிரகம் பிரதிஷ்டை

புதிதாகச் செய்யப்பட்ட நடராஜர் விக்கிரகமொன்று புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விக்கிரகம் புங்குடுதீவின் பல பாகங்களுக்கும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்ட பின்னரே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதர் குருகள் இவ்விக்கிரக பிரதிஷ்டை வைபவத்தை நடத்தினர். பெருந்திரளான பக்தர்கள் இவ்வைபவத்தில் [illegible] கொண்டனர்.

உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:
எல். கே. எஸ்.
“நகை மாளிகை”
கன்னாதிட்டி: யாழ்ப்பாணம்
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே
நவாலி நாகமுத்து கந்தையா
வழக்காளி.
எதிராக
இல. M B 5258
1. காலஞ்சென்றவண்ணார்பண்ணை மேற்கு நாவாந்துறை வலதீசர் இராசமுத்துவின் ஆதனங்கட்குப் பிரதிநிதியாக ஏற்படுத்தப்பட்ட சவக்காலே ரோட்டு நாவாந்துறை இராசமுத்து நிக்கொலாஸ்
2. ஷெயூர் ஜோசேப் மரியதாசன்
3. சூசை மார்க்குவும் பெண்
4. எலிசபேத்துவும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5258ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ காணும் ஒரு துண்டுக் காணி 1964ம் ஆ ஜனவரிமீ 16உ வியாழக்கிழமை (16-1-64) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூ 1934-80 ம் இன்னும் ரூபா 1200 க்கு 30-11-1962 தொடக்கம் 23-7-63 வரை 12 வீத வட்டியும் கூடியதொகைக்கு 23-7-63 தொடக்கம் இறுக்கும்வரையும் 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 251-75 ம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைகோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பாரையடி" நீ. பர (1) ஒன்றும் கல்வீடும் குசினியும் மற்றும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை. மேற்கு வயித்தி ஜோனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு வயிரவன் வேலனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்.
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில், 10-12-63.
M. 232 13-12-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அளவெட்டி
ஆறுமுகம் கந்தையா
—வழக்காளி
இல. M.B. 4302
எதிராக
அளவெட்டி, தற்போது மூல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கிராமச்சங்கக்சந்தோர.
1. கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
அளவெட்டி
2. பெண் மகேஸ்வரி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4302-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1964-ம்ஆண்டு ஜனவரி(தை) மாதம் 11-ம் திகதி (11-1-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 2985-ப். இதில் ரூபாய் 2000-க்கு 29 - 9 - 61 திகதி தொடக்கம் 20-3-62 திகதிவரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 201-95 சதம்.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டியிறை "தாளையடி" நிலப்பரப்பு (18-ம்) வீடும், கிணறும் பயிர்களும். எல்லை கிழக்கு அமரகோன் முருகர் கணபதிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு நாகமுத்து சரவணமுத்துவுக்கும் சரவணமுத்து கந்தையாவுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு வயிரமுத்து ஆனந்தசபாபதிக்கும் இராசரத்தினம் பெண் தையல்நாயகத்திற்குமுரிய ஆதனங்க[illegible] இதில் சொரியலாய் [illegible] (½) வடக்குப்பக்க[illegible] மூன்றில் ஒன்றும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
காரைநகர் வடக்கு
கந்தையா நவரத்தினம்
—வழக்காளி.
இல. M. B. 5179
எதிராக
காரைநகர் மேற்கு காரைநகர்
1. கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம் தானாகவும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கைம்பெண் அமரபதியின் பிரதிநிதியாகவும்
2 பெண் சின்னம்மாவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5179ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1963 ஹு மார்கழி மீ 28 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும் 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3440-50 சதமும் 24-10-62 தொடக்கம் 2 -5 63 வரைக்கும் ரூபா 2000 த்துக்கு 9 வீத வட்டியும் அதன் மேல முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 304·97½ சதமும்.

காணி விபரம

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைநகர் கோயிற்பற்று தங்கோடை கலவியத்தோட்டம் பர. நில இல 17-0 பனைமரங்களும் வடலிகளுடன் எல்லை கிழக்கு கனகசுந்தரம் பெண் பருபதிப்பிள்ளையினுதனமும்ஒழுங்கையும். வடக்கு இராமலிங்கம் நல்லதம்பியினுருத்தாளிஞதனம். மேற்கு முதலாம் எதிரிக்குரியவாதனம். தெற்கு சிவசம்பு கைம்பெண் நாகம்மாவினுதனம். இதடங்கலும் இல C 161/142 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(2) ஷெ இறை "பொசிட்டி" பர. நில இலா 20 0 பனைமரங்கள் வடலிகள் வேம்பு, கல்வீடு குசினி, தலைவாசல், கிணறுகளுடன் எல்லைகிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் இராசம்மாவினுதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு ரோட்டும் நமசிவாயம பெண் தெய்வானைப்பிள்ளையினுதனமும் தெற்கு ஒழுங்கையும் கந்தையா சொக்கலிங்கத்தினுதனமும். இதடங்கலில் 2/3 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும். மேற்கூறப்பட்ட பங்குக்கு வீடு குசினி, தலைவாசல் முற்றிலுமுட்பட, ஆனால் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைப்பங்கு புற நீங்கலாக. இல C 290/41 இன்கீழ் யாழ்ப்பாணத்தில்பதிவுசெய்யப்பட்டுள்ளது

செ. விசாகரெத்தினம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர்,யாழ்ப்பாணம் 27-11-63
M 238 13-

2. மேற்படி அளவெட்டியிறை "பெத்தாவளை" நெற்பரப்பு (28-ம்) கிணறும் பயிர்களும்: எல்லை கிழக்கு மயில்வாகனம் செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு பொன்னையா பெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு வயித்திலிங்கம் பெண் சேதுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் ஆறில் ஒரு பங்கு (1/6).

3 மேற்படி அளவெட்டியிறை "ஆலடி" நிலப்பரப்பு பத்து (10-ம்) பனைகளும எல்லை கிழக்கு ஒழுங்[illegible] வடக்கு தம்பாபிள்ளை சுந்த[illegible]சாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு இராசமுத்தையா துரையப்பாவின் ஆதனம். தெற்கு வயிரமுத்து ஐயாத்துரையின் ஆதனம். இதில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு (¼).

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 16-11-1963,
M 227. 13-12-63.

## சிவாலயங்கள் திருந்தின! எழுந்தன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு சமயத் தொண்டு செய்தனரோ அதுபோலவே நாவலரும் தமது முயற்சிகளினாலும் செய்கைகளினாலும் சைவமக்கள் மத்தியில் ஐந்தாங் குரவரென மதிக்கப்படுகின்றார் கிறிஸ்தவ வெள்ளத்திலே மங்கிக்கொண்டிருந்த சைவ சமயத்தை மீட்டு அதனை நன்னிலையாக்கிய பெருமை நாவலரையே சாரும்.

இதுவரை கவனித்தவற்றுள் நாவலர் செய்த சேவை ஒவ்வொன்றும் மிக இன்றியமையாததாக இருக்கின்றது. தமிழ்ப்பற்று, சமயக்கல்வி, ஒழுக்கம, தன்னலங் கருதாது பிறர்நலங் கருதி வாழுய சிறந்த வாழ்க்கை, மனதில் உறுதி ஆகியவற்றை நாவலர் இறந்தும் எம்மனதில் இருக்கச் செய்துள்ளார்.

தமிழறிவிலும், சைவசித்தாந்த அறிவிலும், ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கிய சைவத்தின் காவலனும் தமிழில் நாவலனுகவும் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1879-ம் ஆண்டு கார்த்திகை மாதம் இறைவனடி சேர்ந்தார்.

நாவலர்போன்றோர்சேவை நாட்டிற்குத் தேவை!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு
இல. 7527
துன்னாலை தெறகு காவெட்டி
M அரியபுத்திரரும்
பெண் இலட்சுமிஅம்மாவும்
வழக்காளிகள்.
சாத்தனை கரவெட்டி கிழக்கு கரவெட்டி சிலம்பு இரத்தினமும் பெண் பாக்கியமும்.
- எதிராளிகள்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டின் 7527-ம் இலக்க வழக்கில் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் காணும் காணியை 1963ம்ஆண்டு மார்கழி மாசம் 28 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1377-00
29 8-1962 தொடக்கம்
7-3-63 வரைக்கும் ரூபா
1250-00 10 வீத வட்டி ரூபா 73-00
அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டி
7-3-63 தொடக்கம் ரூபா 43-09
கோட்டுச்செலவு ரூபா 221-60
——————
1714-69

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோவிற்பற்று கரவெட்டி வென்றிக் குறிச்சியிறை சாத்தனை நிலப் பரப்பு 3 3/4 ஷெ சாத்தனை நிலப்பரப்பு 5 3/4 இப் பிரிவுகளில் தெற்குப்புறமாக மூன்றில் ஒரு பங்குகளாக ஆட்சியில் உள்ள நிலப்பரப்பு 5 குளி 12 இதில் பிரிவிடலாட்சிப்படி வடகிழக்குப் புறமாக இருபத்தைந்தில் ஒன்பது பங்குக்கு நிலப்பரப்பு 1 குளி 17 1/10 ல் தெற்குப் புறமாக ஆட்சிப்படி நிலப்பரப்பு 1 கல் வீடும் எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் வேலுப்பிள்ளை வல்லிபுரத்துக்கும் மனைவிக்குமுரியஆதனம். மேற்கு கையொழுங்கை. இதடங்கலும்.

ஆ. சபாரத்தினம்
கொமிஷனர்.
[illegible]
பருத்தித்துறை, 11-11-63.
M 236 13-12-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வண்ணார்பண்ணை கிழக்கு
செல்லர் நடராசா
கைம்பெண் கனகம்மா
வழக்காளி.
இல M. B. 4125
எதிராக
1. சிவியாதெரு கந்தையா தில்லையம்பலம்
2. ஷெயூர் பெண் மாணிக்கம்
-எதிராளிகள்,
3. அராலி மேற்கு மாணிக்கம் செல்லையா -கூட்டு எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4125 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964 ம் ஹு தை மாதம் 4 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5145ம் ரூபா 3000 -க்கு 6-1-61தொடக்கம் 6-2-62 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 273-80 சதம் இதில் ரூபா 2000 கொடுபட்டது

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிகோவிற்பற்று சிவியாதெருஇறை "சட்டப்பிகறை" பர. நீ இல பத்து குளி பத்தே முக்கால் (பர. நீ. இல 10 குளி 10¾) பனைகள் தென்னைகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு உப்புக்குளம் சந்திர சேகரப்பிள்ளையார் கோவிலுக்குரியவாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு சுப்பிரமணியம் சிவகுருநாதன் பெண் சரஸ்வதிக்குரியவாதனம். தெற்கு விசுவநாதர் தம்பிமுத்து பெண் இராசம்மாவிற்குரியவாதனம் இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
1963ம் ஹு கார்த்திகைமீ 18உ
காரைநகர்,
M 228 13-12-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாவடி
1. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை —வழக்காளி
எதிராக
இணுவில் கிழக்கு சிவன்கோவிலடி
1. செல்லையா மயில்வாகனம் கைம்பெண் ஈஸ்வரி அம்மா தானாகவும் தனது கணவனின் ஆதனங்களுக்கு உரிமைத் தத்துவகாரி தத்துவ வழக்கு நிம்பர் 691
2. செல்லையா சின்னத்துரை
இணுவில் தெற்கு மஞ்சததடி
3. கருணாகரி சுப்பையா
4. பெண் கனகம்மா
2,3,4, எதிராளிகள் கோட்டால் நியமிக்கப்பட்ட உரித்தாளிகள்,
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B, 4582-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1964 ஹு தை மீ 11 உ சனிக் கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல் ரூபா 808 சதம்33 இதில் ரூபா 500-க்கு 1 - 2 - 1962 திகதி தொடக்கம் 10 - 1 - 1963 திகதி வரைக்கும் 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 400 சதம் 40.

காணி விபரம்;

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "அரசு நின்ற ஒல்லை" நிலப்பரப்பு 5, பனைகளும். எல்லை கிழக்கு சோமசுந்தரம் பெண் யோகம்மாவுக்கும் சரவணமுத்து பொன்னையாவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு விநாசித்தம்பி துரையப்பாவுக்குரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு கந்தையாவுக்குரிய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை பெண் சின்னகுட்டியின் உரித்தாளிகளுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் விற்கப்படும். பதவு இலக்கம் D 202/110.

ந ஆறுமுகம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி
2 - 12 - 1963.
M. 221 13-12-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அம்பலவாணர் வேலுப்பிள்ளை
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.
—வழக்காளி
இல. M.B. 4171
எதிராக
1. அருணாசலம் செல்லத்துரை கைம்பெண் சின்னம்மா
2. V. வேலுப்பிள்ளை கைம் பெண் சோதிப்பிள்ளை
3 செல்வராயா கைம்பெண் தங்கம்மா அனைவரும் சிறுப்பிட்டி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4171-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலுதுண்டுக் காணி 1964ஹு தைமீ 13உ (13-1-64) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3981/50-ம் இதற்கு ரூபா 3000-க்கு 25 - 7 - 61 தீர்வைத் திகதி தொடக்கம் 6-12-51 வரை 100-க்கு 6 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 350-45.

காணி விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்வலிகாமம் கிழக்கு புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை "மாதயந்தனை" பரப்பு கிலலாச்சம் 2 குழி 14-ம் பனைகளும். எல்லை கிழக்கு மூத்த தம்பி அருணாசலத்துக்கும் வேலுப்பிள்ளைக்கும் உரிய காணி, வடக்கு ஒழுங்கை, மேற்கு கைலாயர் பெண் முத்துப்பிள்ளைக்கு உரிய காணி, தெற்கு இராமர் மூத்த தம்பியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள. இது அடங்கலும். கிழக்கு எல்லையில் இருக்கிற கிணற்றில் பங்கும்.

2. மேற்படி புத்தூர் கோயிற்பற்று புத்தூர் தெற்கு இறை "வேம்பிறை" பரப்பு கிலலாச்சம 4-ம் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு மூத்ததம்பி நன்னியரின் உரிமைக்காரருக்கும் அம்பலம் விலையனரின் உரிமைக்காரருக்கும் உரிய காணிகள். வடக்கு மூத்த தம்பி அருணாசலத்துக்கும் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனம். மேற்கு கதிர்காமர் இளையதம்பியின் உரிமைக்காரருக்குரியகாணி. தெற்கு ரோட்டு. இது அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

3. மேற்படி சிறுப்பிட்டி இறை "கமலவத்தை" பரப்பு கிலலாச்சம் 3½. இதற்கு எல்லை கிழக்கு மூத்ததம்பி சின்னத்தம்பியின் உரிமைக்காரருக்குரியகாணி வடக்கு சின்னததம்பி தாமோதரம்பிள்ளைக்குரியகாணி, மேற்கு சின்னததம்பி பெண் சின்னதங்கச்சிக்குரிய காணி, தெற்கு சங்கரப்பிள்ளை பெண ஆச்சிகுட்டியின் உரிமைக்காரருக்குரிய காணி இது அடங்கலும்.

4. மேற்படி சிறுப்பிட்டி இறை "உப்புவயல்" பரப்பு நெல்லுலாச்சம் 36 3/4 கிணறும் எல்லை கிழக்கு கனகர் பெண் மூத்துப்பிள்ளைக்குரிய காணி, வடக்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள். மேற்கு கனகர் பெண் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள். தெற்கு கனகர் பெண் முத்துப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய காணி இது அடங்கலும்.

சி செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
உத்தரவு பெற்ற ஏலதாரர்
விதானைவளவு, சித்தன்கேணி
7-12-63.
M. 230 13-12-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில்
துணுக்காய்
வேலுப்பிள்ளை நடேசபிள்ளை
—வழக்காளி

இல. 2572

எதிராக

துணுக்காய் மல்லாவி
இராசையா கார்த்திகேசு
—எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 2572-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1964-ம்ஆ தைமீ 11-ந்உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—ரூபா2496/.வும் 26-12-62 தொடக்கப் 11-3-63வரையும் ரூபா 1600-க்கு 12%வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரையும் 5%வீத வட்டியுப் செலவு ரூபா 197-13 ம். இதில் இறுபட்ட தொகை ரூபா 500 செலவு வகையில் கொடுபட்ட ரூபா 150/-வும் கழிக்க மிகுதி

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூநகரிப்பகுதி துணுக்காய் கோவிற்பற்று மல்லாவியிறை 'துணுக்காயவைதறை' 27பரவிதைநெல் நிலம். எல்லை கிழக்கு கந்தர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம். வடக்கு முடிக்குரிய நிலம், மேற்கு இராசையா இரத்தினசிங்கத்துக்குரிய வாதனம் தெற்கு சின்னத்தப்பி சரவணைக்கும் வேலுப்பிள்ளை நடேசபிள்ளைக்குமுரிய வாதனம். இவ்வெல்லைக்குட் சேர்ந்த வயல் நிலமடங்கலிற் சொரியலாய் ½ அரைவாசியும் குளத்தண்ணீரில் இக்காணிக்குரிய குளத்தண்ணீரும் வழிவாய்க்காற் பாவிப்புரிததும், பதிவு இல. 33/114.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 16-12-63.
M 229 13-12-63.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3395
வேலுப்பிள்ளை கந்தையா கைம்பெண் கனகம்மா நல்லூர்
-வழக்காளி.

எதிராக

1. அந்தோனி பொன்னுத்துரையும்
2. பெண் ரேசம்மாவும்
3. சொலமன் அரியாம்பிள்ளை

அனைவரும் நவாந்தறை
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 3395 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1964ஆடு தைமீ 11 உ (11-1-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 636-10 ம் இதற்கு ரூபா 550க்கு 26-5-60 தீர்வைத் திகதி தொடக்கம் 11-10-60 வரை 100 க்கு 14 வீத வட்டியையும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும் கோட்டுச் செலவால் ரூபா 75 கொடுபட்டது. மிகுதி கழித்து விடப்பட்டது. தீர்வைத் தொகையால் ரூபா 2251 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தெற்குஇறை 'பிறையடி'' பரப்பு நிலலாச்சம் ¾ம் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு அந்தோனி தம்பையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம், மேற்கு அந்தோனி வயித்தியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு சுவாம்பிள்ளை பெண் ரோசையின் உரிமைக்காரருக்குரிய ஆதனம், இது அடங்கலில் சொரியலாய் 2/3 பங்கு

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
(உத்தரவு பெற்ற ஏலதாரரும்)
விதானை வளவு
சித்தன்கேணி, 14-11-63.
M 231 13-12-63

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல. M.B, 4329
யாழ்ப்பாணம்,
வண்ணார்பண்ணை கிழக்கு
சின்னத்துரை பாலசுந்தரம்
--வழக்காளி

ஷெயூர்
1. கந்தர் அப்புத்துரையும்
2. பெண் நாகம்மாவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4329-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை 1964-ம் ஆண்டு தைமாதம் 18-ம் திகதி (18-1-64) சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 763, இதில் ரூபா 500-க்கு 16-10-61ம் திகதி தொடக்கம் 11-5-62வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டு (12%) வீதமான வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்குர்வரை சட்டப்படியுள்ள வட்டியும் கோட்டுச் செலவும் ரூபா 198-95 கோட்டுச்செலவில் ரூபா 75-ம் மேற்சொல்லிய தீர்வைததொகையில் ரூபா 400 இறுபட்டது,

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை.

1. ''முல்லைக்கட்டையடி'' பர. நில, இல 2 குளி 12. இதில் தென்கிழக்குப்பககமாக குளி 12¾ மிகுதிக்காணியின் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் கீழ் விபரிக்கப்படும் பாதையால் வழி வாய்க்காற் பாவிப்புரித்தும் இந்தக்குளி 12¾ பன்னிரண்டே முக்காலுக்கும் எல்லை கிழக்கு கந்தையா செல்லத்துரையின் காணி, வடக்கு இந்துக்கல்லூரியின் ஆதனம் மேற்கு கீழ் விபரிக்கப்படும் ஒழுங்கையும் மிகுதி ஆதனமும், தெற்கு கை ஒழுங்கை.

2. ஷெ இறை ஷெ காணி ஒழுங்கை விசாலம் குளி 2 7/8 இதற்கு எல்லை கிழக்கு கந்தையா செல்லத்துரையின்காணி, வடக்கு மேற்சொலலிய காணியும் இராமன் தப்புவின் காணியும், மேற்கு ஒழுங்கை, தெற்கு இந்துக்கல்லூரியின் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் காலில் ஒன்று (¼).

K. Subramaniam.
க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர்.
No. 199/5 இல்னர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
4-12-1963.
M. 235 13-12-63

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
மல்ஷி ஆயுள் அஷ்யூரன்ஸ்
கம். லிட்.
—வழக்காளி

வழக்கு இல. M.B 3945.

எதிராக

23, செம்மணி ரேட்டு,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்
வேலுப்பிள்ளை செல்லையா
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 3945-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணி 1963-ம் வருடம் மார்கழி மாதம 31-ந் திகதி (31-12-63) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 5325-ம், 6-3-61 தொடககம் 8 8-61 வரைக்கும் ரூபா 5000-க்கு 12 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 269-65 சதமும். இவற்றில் ரூபா 1000 கட்டப்பட்டுள்ளது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி. நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் இறை, ''நாயன்மார் குளம் வடககு மேட்டு வயல்'' நெற்பரப்பு 50 குளி 6. செய்பயிர் வான்பயிர்களும், இதடங்கலிலும் தெற்குப்பக்கத்தல் நடுவில் நிந்தமாக நெற்பரப்பு 13 குளி 6, குறிக்கப்பட்ட நிந்தமாகவுள்ள தெற்பரப்பு 13 குளி 6 ல் கிணறும் பயிர்களும், எல்லை கிழக்கு குணரத்தினம் தங்கசாமியின் ஆதனம், வடக்கு சியம்புலிங்கம் நாதன் சரஸ்வதிக்குரிய ஆதனம். மேற்கு சத்தியானந்தன் செல்வநாயகியின் ஆதனம், தெற்கு ஒழுங்கை, D 264/271-ல் பதியப்பட்டது. (காணி முழுவதும் உறுதியின்படிநெற்பரப்பு 50 3/4 ஆனால் D 109/8-ல் பதிவுப்படி அளவில் நெற்பரப்பு 50 குளி 6. நெற்பரப்பு 14-ம் நெற்பரப்பு 36 3/4 ம் முறையே D 8/291-லும் 9/355-லும் பதியப்பட்டது).

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
11/ஐ, மேல்மாடி,
மொம்சாக் கட்டிடம்.
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்,
25-11-63,
M. 234 13-12-63

---

யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

**100 ரூபா விகிதமான 5000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்'' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1, சின்னத்தம்பி பெரியதம்பி
2. சின்னத்தம்பி கனகசபை
3. சின்னத்தம்பி வடிவேலு
அனைவரும் புத்தூர் மேற்கு புத்தூர்.
—வழக்காளிகள்.

இல. M.B. 1125

எதிராக

1. அருணாசலம் கனகசபை
மூத்துககுமாரு
—புத்தூர்கிழக்கு, புத்தூர்
2. செதுங்கமாப்பாணர் ராசா என வழங்கும தம்புராசா ஐமையலன் குறிச்சி உடுப்பிட்டி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B, 1125-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலுதுண்டுக் காணிகள் 1963 ஆடு மார்கழி மீ 28 உ (28-12-63) சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 7500-ம். இதற்கு ரூபா 5000—க்கு 27-7-56 தீர்வைத்திகதி தொடக்கம் 6-4-60வரை 100-க்கு 5 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரைககும் 5வீத வட்டியம் கோட்டுச்செலவு ரூபா, 361-20.

காணி விபரம்:

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெற்கு இறை 'பள்ள சுடுகாடு'' பரப்பு நெல்லுலாச்சம் 83 எண்பத்திமூன்று. இதற்கு எல்லை கிழக்கு சிற்றம்பலம் நடராசா பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய காணி, வடக்கு நடராசா பெண் சிவகாமிப்பிள்ளைக்கும், சின்னப்பொடியன் வெள்ளையனுக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள், மேற்கு தம்பு பெண் தங்கத்துக்கும் பளவராயர் கந்தையாவின் உரித்தாளருக்கும் உரிய காணிகள். தெற்கு ரேட்டும் நடராசா பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய காணிகள் இதடங்கலும்.

2, மேற்படி புத்தூர் தெற்கு இறை ''கருகப்பைக்கலட்டி'' பரப்பு நிலலாச்சம் 16-ம். இதற்குள் இருக்கும் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கதிரேசபிள்ளை சின்னையாவின் உரித்தாளருக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள். மேற்கு விநாயகர் பெரியதம்பிக்கும் உரிததாளருக்கு உரிய காணியும். ஒழுங்கையும். தெற்கு வாரியர் கந்தர் உருத்தாளருக்குரிய காணியும் ரேட்டும் பெரியதம்பி ஞானசேகரனின் உரிததாளருக்கும் கனகசபை முத்துக்குமாருக்கும் உரிய காணிகள். இது அடங்கலில் சொரியலாய் அரைவாசி அதைச்சேர்ந்தவைகளும்.

3. மேற்படி புத்தூர் தெற்கு இறை ''கருகப்பைககலட்டி'' பரப்பு நிலலாச்சம் 1½யும் பனைகளும் மற்றும் பயிர்களும், எல்லை கிழககு சுப்பிரமணியம் சதாசிவத்துக்கும் மறுபேருக்கும் உரிய காணி, வடக்கு வயிரவிலிங்கப் பெண் சின்னைப்பிள்ளையின் உரித்தாளருக்கும் கனகசபை முத்துக்குமாருவுக்கும் உரிய காணிகள். மேற்கு ஒழுங்கை தெற்கு சிற்றம்பலம நடராசாவுக்கும் வாரியர் கந்தரின் உரித்தாளருக்கும் உரிய காணிகள். இது அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

4, மேற்படி புத்தூர் தெற்கு இறை ''தலைசாட்டி'' பரப்பு நிலாச்சம் 6-ம். எல்லை கிழக்கு வேலன் பெண் சிவகாமனின் காணி. வடக்கு எஸ். சேதுபதிக்குரிய காணி. மேற்கு ரேட்டு. தெற்கு எஸ். சங்கரப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய காணி. இது அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

அ. [illegible]ஜெகநாதன்
கொமிஷனரும் வி[illegible]ப்பாளரும்
16[illegible], அம்மன் ரேட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M 225 8-12-63.

---

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 125, சிவன் கோவில் வடக்கு வீதியில் அடைவு பிடிக்கும் திரு. க. தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1-5-62 தொடக்கம் 30-11-62 வரைக்கும வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1963ம் ஆடு டிசம்பர் மீ 31உ (31-12-63) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
Licensed Auctioneer & Valuer.
643 காங்கேசன் துறைவீதி.
யாழ்ப்பாணம். 10-12-63.
M 237 13, 20-12-63

---

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டு வழககு இலககம் 6315

வழக்காளி: கந்தன் முருகன் கைம்பெண் பொன்னி
[காலம்சென்ற கந்தன் முருகனின் ஆதனங்கட்கு டிஸ்திரிக் கோட்டு தததுவ வழககு இல: 547 இன் தததுவகாரி]

எதிராளி:

(1) கந்தையா தில்லையம்பலம்
(2) பெண் இலட்சுமிப்பிள்ளை
—கரவெட்டி கிழக்கு
(3) சின்னப்பொடியன் செல்லன்
(4) பெண் மீனாட்சி
—கரவெட்டி கிழக்கு.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனககு அனுப்பப்பட்ட கொம்மிசன் அதிகாரப்படியும் அதன் கீழ் காணும் ஆதனங்கள் 1964 ம் ஆண்டு தை மாதம் 30 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குறிதத ஆதனங்களிடமாக இருந்து என்னால பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக்கோயிற்பற்று கரவெட்டி வதிரிககுறிச்சி 'தாழைய புலம்' நி பரப்பு 4 குளி 1 22/32 இதில் பிரிவிடல் வழக்கு பருத்திததுறை ரெக்குவஸ்ட் கோட்டு இலககம் 21083 இல் அணைக்கப்பட்ட படத்தில் 1ம், 2ம், துண்டு நிலப்பரப்பு 3 குளி 13 19/32 இதில் கிழக்குப் புறமாக உள்ள நிலப்பரப்பு 2 இதல் வேப்பமரங்களும் உட்பட எல்லை கிழக்கு ஒழுங்கையும் வடக்கு கதிர்த்தம்பி மூத்ததம்பிகளும் மறுபேருக்கும்உள்ள ஆதனங்கள். மேற்கு கதிரன் வேலனுக்கும் மறுபேருககும்உள்ள ஆதனங்கள். தெற்கு கை ஒழுங்கையும் இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும்,

| | ரூ. ச. |
|---|---|
| தீர்வைத்தொகை: | 554-33 |
| வட்டி ரூபா 500-க்கு 6-3-59 தொடக்கம் 20-10-59வரை10வீதப்படி | 33-34 |
| 5 வீதப்படி ரூபா, 887-67 க்கு 20-10-59 தொடககம் விற்கும் திகதிவரை | 192-32 |
| செலவுததொகை | 251-38 |
| மொத்தம் | 1331-37 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சங்கிதிவேல்,
பருததித்துறை. 20-11-63.
M 226 13-12-63

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-12-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்[illegible]
ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org